## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : S. T. C. No. 509/2020**

**Prosecution Witness : P. W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : அமர்நாத் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 27/01/2026

Accused Present.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் தற்போது காரனோடையில் வசிக்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால், பன்னிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். பிரமாணத்திலுள்ள விவரங்கள் படித்து அறிந்து கொண்டு கையொப்பம் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால், என்னுடைய மாமா சஞ்சய் சுவாமி மூலம் தெரிய வந்தது. நேரடியான பழக்கம் எனக்கும் அவருக்கும் உள்ளதா என்றால், இல்லை. நான் எதிரிக்கு நேரடியாக பணத்தை யார் முன்னிலையில் எப்போது எங்கு வைத்து கொடுத்தேன் என்றால், என் மாமா முன்னிலையில் காரனோடை ஐடிபிஐ வங்கி அருகே 01.10.2017ல் கொடுத்தேன். எந்த முறையில் பணத்தை எதிரிக்கு கொடுத்தேன் என்றால், ரொக்கமாகவும், காசோலை மூலமாகவும் கொடுத்தேன். எதிரி எங்கு வசித்து என்ன தொழில் செய்து வருகிறார் என்றால், கும்மிடிப்பூண்டி அருகே வசிப்பது தெரியும். ஸ்ரீபெரும்புதூரில் சாம்சங் கம்பெனியில் வேலை செய்வதாக என் மாமா தெரிவித்தார். நான் சொல்வது தவறான விவரம் என்றால் சரியல்ல. எதிரி மேற்படி

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

நிறுவனத்தில் வேலை செய்வதை உறுதிப்படுத்த என் மாமா மூலம் அந்த ஆவணத்தை பெற்று வர முடியுமா என்றால், என் மாமாவை கேட்டால் தெரியும். அனைத்து விவரங்களும் என் மாமாவிற்கு தான் தெரியும் என்றால், காசு நான் தான் கொடுத்தேன். பணத்தை யார் கொடுத்தார்கள் என்றால், நான் தான் கொடுத்தேன்.

மாமாவிற்கும் எதிரிக்கும் எப்படி பழக்கம் ஏற்பட்டது என்றால், எனக்கு தெரியாது. எத்தனை நாள் என் மாமாவிற்கும் எதிரிக்கும் பழக்கம் என்ற விவரம் தெரியாத போது எப்படி நான் பணம் எதிரிக்கு கொடுத்தேன் என்றால், மாமாவின் வார்த்தையின் நம்பிக்கை அடிப்படையில் கொடுத்தேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA